RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt222222

OPEN ACCESS

# வைகுண்டசுவாமி, இராமலிங்கசுவாமி சமுதாயச் சிந்தனைகள் ஒப்பீட்டு ஆய்வு

அ. லதா மகேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீதேவிகுமரி மகளிர் கல்லூரி, கன்னியாகுமரி- 629163, தமிழ்நாடு, இந்தியா.

# A Comparative Study of Vaikundaswamy, Ramalingaswamy Community Thoughts

H. Latha Maheswari [a, *]

[a] Department of Tamil, Sree Devi Kumari Women's College, Kanyakumari-629163, Tamil Nadu, India

* Corresponding Author: lathamaheswari957@gmail.com

Received: 18-12-2021
Revised: 11-04-2022
Accepted: 16-04-2022
Published: 27-04-2022

Check for updates

## ABSTRACT

In the 19th century there was a great domination of the higher-class people towards the lower-class people in Kanyakumari district. The latter was discriminated on the basis of social, political and caste system. When this discrimination was at its high peak social reformers like Vaikunda Swami and Ramalinga Swamy came to rescue the segregated class of people. Vaikunda Swami hailed from Kanyakumari District and Ramalinga Swami from Southarcot District. These two reformers advocated the policy of 'one caste, one religion and one God.' They revamped the society with their principle and revolutionized the spirit of people to live a civilized life. They fought for the Social Justice of the socially downtrodden People. In order to commemorate the struggle and service rendered to the socially, politically and Economically segregated Sect, Vaikunda Swami and Ramalinga Swamy are regarded as Gods among the people. Vaikunda Swamy's Akila thirattu Ammanai and ArulNool contain the social reformation of his age. Similarly, Ramalinga Swamy's Thiruvaruttapa and Thiruvarutppa Varainadaipakuthy portray social atrocities confronted by the lower-class people. This article attempts to compare the ideas between Vaikunda Swami and Ramalinga Swamy's reformative books titled Akilathirattu Ammanai, ArulNool and Thiruvaruttpa, Thiruvaruttpa Vurainadaipakuthy.

**Keywords:** Ayyavazhi Iyakkam, Samarasa Suddha Sanmarga Sathiya Sangam, Tharmachalai, Impathikal, Anbuvanam, Kali.

## முன்னுரை

19-ஆம் நூற்றாண்டில் இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் கேரள மாநிலத்துடன் இணைந்து தென் திருவிதாங்கூர் என்ற பெயருடன் விளங்கியது. (கி.பி.1956 நவம்பர் 1-ஆம் தியதி தமிழகத்துடன் இணைந்தது) இங்கு பூவண்டன் தோப்பு எனும் இடத்தில் கி.பி 1809 ஆம் ஆண்டில் அவதரித்த வைகுண்டசுவாமி 'அய்யாவழி இயக்கம்' சார்பாகவும் கி.பி.1823 ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம் மருதூரில் தோன்றிய இராமலிங்கசுவாமி (வள்ளலார்) 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற அறநெறி இயக்கம் வழியாகவும் சமூக நீதியை நிலைநாட்டப் போராடினர் (Vijayakumar, 2021). இருவரின் சீர்திருத்த கொள்கைகளும் பெரும்பாலும் ஒரே தன்மையில் விளங்குவதால் ஒப்பீட்டு நோக்கில் ஆய்வு செய்யப்படுகிறது.

## சாதியில்லா சமத்துவ சமுதாயம்

பிறப்பால் சாதி, சமய வேறுபாடு இல்லை என்பது ஆன்றோர்கருத்து 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறார்' வள்ளுவர். (Subramanian, 2010) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது கணியன் பூங்குன்றனார் வாக்கு. (Subramanian, 2010) இவ்வாறு காலம் காலமாகச் சமத்துவத்தை வலியுறுத்தி வந்தாலும் எண்ணற்ற சாதிப்பிரிவுகள் தோன்றி சமுதாயத்தில் ஒற்றுமையைக் குலைத்து ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியது. இதனைக் கண்ணுற்ற வைகுண்டசுவாமி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மக்கள் தங்களுக்குள் வகுத்துக்கொண்டதே சாதி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுக்கு எல்லாச் சாதியும் மதமும் ஒன்றே என்பதை,

'எவ்விடந் தாமாய் மேவி இருப்பவர்க் கெந்தச் சாதி' (Vivekanandan, 1991)

என்கிறார். மனிதர்களால் உருவாக்கப்பட்ட சாதிகள் நிலைத்து நிற்காது. அழிந்துவிடும். இதனை,

'தன்னந் தன்னாலே சாதிக்குச் சாதிமாளும்' (Vivekanandan, 1991)

என அகிலத்திரட்டு அம்மானை கூறுகிறது. சாதி வேறுபாட்டை அகற்றுவதற்கு வைகுண்ட சுவாமி, சுவாமி தோப்பில் இரண்டாண்டுகள் சாதிச்தவசு இருந்ததை,

'தத்தமுள்ள இரண்டாம் தவசு சாதிக்காமே' (Vivekanandan, 1991)

என்பதால் அறியலாம்.

திருவிதாங்கூரில் பதினெட்டுச்சாதிகள் இருந்தமையை அகிலம் கூறும் (Vivekanandan, 1991). இப்பதினெட்டுச் சாதி மக்களும் ஒற்றுமையுடன் தன்னை நாடி வர வேண்டும் என்று இறைவனை ஒரே எண்ணமாக நினைத்து வைகுண்டசுவாமி தவசு இருந்தார். சாணான் முதல் சக்கிலியன் ஈறாக உள்ள அனைத்து இன மக்களும் அவரை நாடி வந்து ஓரிடத்தில் (சுவாமிதோப்பில்) கூடி வைகுண்டரின் திருவடியை வணங்கி ஒரே கிணற்று நீரை (முத்திரிக் கிணறு) உண்டு மனம் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். இதை,

'சாதிபதி னெட்டும் சடல வரவுமற்று

ஆதிவை குண்டர் அடிவீழ்ந் தேற்றியவர்

எல்லா மொருதலத்தில் இரண்டு மனுப்போலே

அல்லோரும் வந்து ஓராவிநீ ருண்டிருந்தார்' (Vivekanandan, 1991)

என்ற அடிகள் உணர்த்தும். மக்களின் அன்புள்ளமே சாதியை ஒழித்து ஒற்றுமை நெறியைத் தருவது என்ற சிந்தனை இங்கு வலியுறுத்தக் காணலாம்.

வள்ளலார் சாதியும் சமயமும் மக்கள் தம் நலனுக்காக உருவாக்கிக் கொண்டவையே தவிர இறைவனால் வகுக்கப்பட்டவை அல்ல எனவும் அருட்பெருஞ்சோதியாகிய இறைவனுக்குச் சாதியும் சமயமும் இல்லை என்பதை,

'சாதியும் மதமும் சமயமும் காணா

ஆதி அநாதியாம் அருட்பெருஞ் ஜோதி' (Duraiswamy Pillai,1983)

என்றும்,

'சாதி மதந் தவிர்த்தவரே இறைவன்' (Duraiswamy Pillai,1983)

என்றும் குறிப்பிட்டுள்ளார். சாதி சமயங்களை உண்மையென்று நம்பி மக்கள் தம் வாழ்நாளை வீணாக்குவதை உணர்ந்த வள்ளலார் மக்களிடம்,

'சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்

அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே' (Duraiswamy Pillai,1983)

என்று சுட்டிக்காட்டினார்.

சாதிகள், சமயங்கள், மதங்கள் அனைத்தையும் குழித்தோண்டிப் புதைத்து, மண்பெய்து மூடிவிட்டு சன்மார்க்க நன்னெறியில் ஈடுபட வலியுறுத்தியும் (துரைசாமிப்பிள்ளை, 1989,.பா.4654) சன்மார்க்கம் ஒன்றே சாதியும் மதமும் சமயமும் தவிர்த்த திருநெறி என்பதை உணர்ந்து சமரச சன்மார்க்கத்தில் வந்து சேர்ந்திடுங்கள் என்று அழைப்பு விடுத்ததை,

'சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே

சத்தியச் சுத்த சன்மார்க்க

வீதியில் உமைத்தான் நிறுவுதல் உண்மை

விளம்பினேன் வம்மினோ விரைந்தே' (Duraiswamy Pillai,1983)

என்கிறார்.

சாதி, சமய வேறுபாடு நீங்கி சமதர்மமாகிய பொது நெறி நிலவுதல் வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் திருவருட்பாவில் பதிவு செய்துள்ளார் (Duraiswamy Pillai,1983). சாதியில்லா சமத்துவ சமுதாயம் காண விரும்பிய அவரின் அவாவை உணரலாம்.

## தருமம்

தருமம் என்பது எவ்விதப் பிரதிபலனையும் நோக்காது வலியோர் எளியோருக்குப் பொருள் கொடுத்து ஆதரிப்பது ஆகும். நிலவுடைமைச் சமுதாயத் தோற்றம் காரணமாக ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டால் ஏழைகள் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டனர். வறுமை நோயில் தவித்தனர் மனிதர்களை மிருகங்களின் நிலைக்குக் கொண்டு சென்றது பசியின் கொடுமை. பசியானது ஒரு கொடிய நோயாக விளங்கி பிணியாக மாறியது.

மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார்,

'ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (Venkataswami Naattaar, 1964)

என்கிறார்.

ஏழை மக்களே நாம் வழிபடும் கடவுள், இடையறாது ஏழைகளைப் பற்றியே எண்ணுங்கள் அவர்களுக்காகவே உழையுங்கள், இங்ஙனம் அவர்களுக்காக யார் உளம் கசிந்துருகி கண்ணீர் வடிக்கிறார்களோ அவர்களே மகாத்மாக்கள் என்கிறார் விவேகானந்தர் (Ponnu, 2002).

'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தருமம்' எனும் உறுதிப்பாடுடைய வைகுண்டசுவாமியும் தருமத்தையே உன்னத நெறியாகக் கொண்டு செயல்படுத்தினார். பொருள் வேண்டியும் உணவு வேண்டியும் இரப்பவர்களுக்கு உதவினால் அது இறைவனுக்குச் செய்யும் தொண்டு அவர்களுக்கு ஏதாவது துன்பங்கள் நேர்ந்தால் அங்கு அவர்கள் செய்த தர்மம் கடவுள் வடிவில் வந்து துணைநிற்கும் என்பதை,

'அன்பாக அன்னம் இட்டு ஆதரித்த பக்தருக்கு

என்ன என்ன அபாயம் இடுக்கமது வந்தாலும்

அந்நேரம் நாராயணன் ஆயன் அங்கே நான் வருவேன்' (Vivekanandan, 1991)

என்றும், 'பிச்சை என்று வருவோர்க்கு வேண்டுவன அளித்து அரவணைப்பவர் என்னை ஏற்றுக்கொண்டவர்' (Vivekanandan, 1991) என்றும் கூறுவார். மேலும் மக்களிடம்,

'தானம் தர்மம் செய்திடுங்கோ தழைப்பீர்கள்

தருமம் செய்வதால் தருமம் பெருகும்' (Vivekanandan, 1991)

என்றும்,

இரப்போர்க்கு அன்னமது ஈந்திடுங்கோ கண்ணுமக்காள்

ஆடை கொடுத்திடுங்கோ அம்பல ஆசாரம் செய்திடுங்கோ

கொடுத்தாலும் அன்னம் குறையாமல் கொடுத்திடுங்கோ' (Vivekanandan, 1991)

என்றும், தருமம் செய்து மக்கள் சிறப்புற்று வாழ அறிவுறுத்தியுள்ளார். இவருடைய கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் தருமம் செய்வதை வாழ்வின் கடமையாகக் கொண்டுள்ளனர். இவருடைய வழிபாட்டுதலங்களாகிய பதிகளும் தாங்கல்களும் தர்மம் செய்வதையே நோக்கமாக, கொண்டு இன்றும் செயல்பட்டு வருகின்றன.

வள்ளலார், பொருளாளர் உண்ணும்போது வறியாளர் பசியால் உள்ளம் வருந்த அதனால் தான் வருந்தியதையும் (Duraiswamy Pillai,1983), பசித்து இருப்பவர்களைப் பற்றிப் பிறர் கூறக்கேட்டு நடுக்குற்றதையும் திருவருட்பாவில் பதிவு செய்துள்ளார் (Duraiswamy Pillai,1983).

பொருள் இருந்தும் வறியவர்க்குக் கொடுத்து உதவும் ஈகைக் குணம் இல்லாத மனிதர்கள் இச்சமூகத்தில் நிறைந்து விளங்குவதை,

'பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்

பசியோடே வாந்தாரைப் பார்க்கவும் நேரீர்' (Duraiswamy Pillai,1983)

எனக் கருணை இல்லா மனம் படைத்தோரைச் சாடுகிறார்.

'இல்லாதவர்களுக்குப் பிச்சையிட்டு உண்ணத் தயங்குவதையும்' (Duraiswamy Pillai,1983) பசித்து வருபவர்களின் சோர்ந்த முகத்தைப் பார்த்து ஒருபிடிச் சோறு கொடுக்க இசைவு இல்லாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் (Duraiswamy Pillai, 1983).

பசியோடு இருப்பவர்களுக்கு உணவு கொடுத்து பசியாற்றுகின்றவர்கள் தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்கச் சிறப்புடையவர்கள் ஆவர். கடவுள் சாட்சியாக இது சொல்லப்படுகின்றது என்பார் (Ooranadigal, 1981).

பசியினால் வருந்துகின்ற சீலர்களுக்கு ஆகாராம் கொடுத்து அந்தப்பசி வருத்தத்தை நீக்கி திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய ஜீவகாருண்யம் என்கின்ற திறவுகோலைக் கொண்டு தான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும். அறிவு விளங்கிய சீலர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்று வள்ளலார் தெளிவுறுத்தினார் என்று வெள்ளை வாரணர் கூறுவதும் சிந்திக்கத்தக்கது (Vellaivaranan,1986)

ஏழைமக்களின் பசியைப் போக்குவதற்கெனவே 23-05-1867 -இல் வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி பசிபோக்கி வந்த அமுதசுரபியாக விளங்கியவர் வள்ளலார். இன்றும் ஏழைமக்களின் பசிபோக்கும் அறச்சாலையாகத் தருமச்சாலை செயல்பட்டு வருகிறது.

## கல்வி

வைகுண்டசுவாமி, வள்ளலார் வாழ்ந்த காலச் சூழலில் எல்லோருக்கும் கல்வி கிடைக்காத நிலையும் மறுக்கப்பட்ட நிலையும் இருந்தன. பெரும்பான்மையான மக்கள் குலத்தொழிலையே செய்து

வந்தனர். ஆங்கிலக் கல்வி செல்வாக்குப் பெற்று அது வசதி படைத்தோருக்கு உரிமையுடையதாக இருந்தது. சில தனியார் கல்வி நிலையங்களும் எழை மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்கு மறுத்தன. ஒடுக்கப்பட்ட மக்கள் மேன்மையுற வேண்டுமெனில் அனைவரும் கல்வி பெற வேண்டும் என்ற கொள்கையுடையவர்களாக இருவரும் திகழ்ந்தனர்.

வைகுண்டசுவாமி ஆண் பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் கல்வி கிடைக்க வழிகாட்டியதோடு முதியோர்கல்வியையும் அறிமுகப்படுத்தி செயல்படுத்தியுள்ளார். ஏழை மாணவர்களுக்கு உணவும் கொடுத்து கல்வி கிடைக்க வழிவகை செய்தவர். வைகுண்டசுவாமி சமத்துவ வழிபாட்டிற்கென சுவாமிதோப்பு (சுவாமிதோப்புபதி), பள்ளம் (அம்பலப்பதி), கன்னியாகுமரி மாதவபுரம் (முட்டப்பதி), சூரங்குடி(பூப்பதி), தென்தாமரைக்குளம் (தென்தாமரைக்குளப் பதி) ஆகிய ஐந்து இடங்களில் ஐம்பதிகளையும் ஊர்கள் தோறும் பல நிழல்தாங்கல்களையும் தோற்றுவித்தார். இவைகள் அறிவுரை வழங்கும் இடமாகவும் கல்விக் கூடங்களாகவும் செயல்பட்டு வந்துள்ளன. சில கிராமங்களில் அண்ணாவிகளால் செயல்படுத்தப்பட்டு வந்த திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இத்தாங்கல்களில் வைத்து நடத்தப்பட்டன என்று ஒட்டன்கதை கூறுகிறது (Sarveswaran, 1982). இன்றும் ஐம்பதிகளில் ஒன்றான சுவாமிதோப்பு பதிக்கு அருகாமையில் உள்ள ‘அன்பு வனத்தில்’ ஏழை மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்துக் கல்வியும் புகட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

வள்ளலாரும் ஆண் பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் கல்வி கிடைக்கவும், முதியோர் கல்வி கற்கவும் வழிகாட்டியவர். எனினும் ஏழைச்சிறுவர்கள் கல்வி பெறாமல் தங்கள் குலத்தொழிலையே செய்து வந்தனர். இதைக் கண்ட வள்ளலார் ஏழை மாணவர்களுக்கு மூன்று நேரம் உணவும் ஊக்கத்தொகையும் அளித்துக் கல்வி கற்பிக்க வழிவகுத்துக் கொடுத்தார் (கண்ணையா,2000).

பொருளாதார ஏற்றத்தாழ்வோ, சாதி, சமய வேறுபாடோ பால் பேதமோ இன்றி அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வகையில்’ “சன்மார்க்க போதினி’ என்ற கல்வி நிறுவனத்தை 1867-ஆம் ஆண்டு நிறுவினார். இதில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்வி இலவசமாகப் பயிற்றுவிக்கப்பட்டது (Ooranadigal, 1981). இன்று வள்ளலாரின் பெயரில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இன்று அரசு ஏழைமாணவர்களுக்கு என்று சத்தணவுத் திட்டத்தையும் படிப்புக்கு உதவித்தொகையும் வழங்கியதைப் போல் 170 ஆண்டுகளுக்கு முன்பே வைகுண்டசுவாமியும் வள்ளலாரும் அரசின் இன்றைய திட்டத்திற்கு முன்னோடியாக விளங்கியமையை உணரலாம்.

## விதவைக்கோலம் எதிர்ப்பு

கணவனை இழந்த பெண்கள் தாலி முதலான பிற ஆபரணங்கள் எவையும் அணியக்கூடாது, நல்ல ஆடை அணியவோ, நல்ல காரியங்களில் ஈடுபடவோ கூடாது, அவர்களை ‘அறுதலி, கைம்பெண்ணாட்டி, கம்மனாட்டி, கட்டை என்றெல்லாம் கூறி அவமதித்தனர். வைகுண்டசுவாமிகள் பெண்கள் என்றும் மங்கலக் கோலத்துடன் இருக்கவேண்டும் என்ற தன் எண்ணத்தை அகிலத்திரட்டு அம்மானையில் இடம்பெறும் ஏழு சான்றோர் வாழ்வியலுடன் சுட்டிக்காட்டி அறிவுறுத்தியுள்ளமையைக் காணலாம். இவர்களில் இரண்டு சான்றோர் இறந்துபட்டதும் அவர்கள் திருமணமானவர்களாக இருந்தால் அவர் மனைவியர்,

‘இட்ட வுடைமை இறக்கா திருப்பாரோ

கட்டின மங்கலியம் கழற்றா திருப்பாரோ

இத்தனையும் கழற்றாது இருக்கச் சிவன்செயலால்

புத்தி தனைக்கொடுத்துப் பெண்ணரசைக் காப்பாரோ’ (Vivekanandan, 1991)

என்று கூறுவதிலிருந்து பெண்கள் கணவனை இழந்தால் தாலி முதல் மற்ற உடைமைகளை நீக்கத் தேவையில்லை என்பதை வலியுறுத்தியமை புலனாகிறது. இறந்த இரண்டு சான்றோர்களின்

மனைவியர் 'தாலியைக் கழற்றாமல்' இருந்தமையையும் அகிலத்திரட்டு உணர்த்துகிறது (Vivekanandan, 1991).

வள்ளலார் பெண்கள் என்றும் மங்கலக் கோலத்துடன் இருக்கவேண்டும் என்ற சீர்த்திருத்த எண்ணத்தைத் திருவருட்பாவில்,

'கைம்மையே தவிர்த்து மங்கலம் அளித்த

கருணையே' (Duraiswamy Pillai,1983)

என்றும், புருடன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம் என்றும் புரட்சிகரமான கருத்தை வெளியிட்டுள்ளார் (Ooranadigal, 1981).

## இறைவரி

நாட்டைக்காக்கும் மன்னன் ஆறில் ஒரு பகுதி வரியாக வாங்கலாம் என்று மனுநூல் கூறுகிறது (Loordhu, 1981). திருக்குறள்,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்

கிறையென்று வைக்கப் படும்' (Subramaniam,2012)

என்கிறது.

திருவிதாங்கூர் மன்னன் ஒடுக்கப்பட்ட மக்கள் உழைத்துச் சம்பாதித்த பணத்தையெல்லாம் வரியாக வசூலித்து விலங்குகளை விட கேவலமாக இழிவுபடுத்தியுள்ளான். ஒடுக்கப்பட்ட ஆண்களுக்குத் தாடி முளைத்தால் முடிவரி கட்ட வேண்டும் பெண்களின் மார்பகங்களுக்கு வரிகட்ட வேண்டிய நிலை இருந்துள்ளது. ஒரு ஈழவப் பெண்ணிடம் மார்பகங்களுக்கு வரிவசூலிக்க வந்தவர்கள் வரிகேட்டுக் கொடுமைப்படுத்த அவள் அவமானத்தால் தனது மார்பகங்களில் ஒன்றினை அறுத்து அவர்களிடம் கொடுத்தாள் என்ற இரத்த கறைபடிந்த நிகழ்வும் திருவிதாங்கூரில் நடந்துள்ளது.

திருமணம் செய்வதற்குரிய தாலிக்கு வரி, கம்பு, தடி, போன்றவற்றை வைத்துக்கொள்வதற்கு வரி, பனைமரம் ஏறுவதற்கு வரி, பூமியிலே தானே வளர்ந்த மரத்திற்கு வரி என்று 110 வகையான வரிகளை விதித்து கொடுமைபடுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

"கரியிறை பாட்டவிறை கண்டபாட்ட விறையும்

தரிசுவிறை காணாத தரைப்பாட்ட விறையும்

ஆமிசங்க ளில்லாத அன்னீத வம்பிறையும்" (Vivekanandan, 1991)

எனப் பாடல் வரிகள் கூறுவதற்கேற்ப அநியாய வரிகளை விதித்தும் வரிகொடுக்காத மக்களை அடித்து அறையில் அடைத்து பட்டினி போட்டும் அவர்கள் வாழ்வை சீர்குலைத்து துன்பப்படுத்திய நிகழ்வுகளும் அகிலத்திரட்டு அம்மானையில் பதிவாகியுள்ளன.

வள்ளலாரும் கொடுங்கோல் மன்னர்கள் மக்களிடம் வரிவசூலிப்பதைக் கண்டித்து,

'- - - - - - - -இடர்க்கொடுங்கோல் இறைவரிக்கும்

கொடுத்திழப்பர் என்னே என்னே' (Duraiswamy Pillai, 1983)

எனக் கூறியுள்ளார்

கொடுங்கோல் மன்னர்கள் மக்களிடம் வருவாய்க்குத் தகுந்தார் போல் வரிவசூலிக்காமல் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும்படி வரிவசூலித்துக் கொடுமைப்படுத்தியுள்ள சமூக நிலையைப் பதிவு செய்துள்ளனர்.

## வட்டி வாங்குதல்

சமூக அநீதிகளில் வட்டி வாங்குதலும் ஒன்றாகும். கொடுக்கும் பணத்திற்கு வட்டி வாங்கிப் பணம் சேமிப்பதையே ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்பவர்களையும் வட்டிச் சுரண்டலால் ஏழைகள் அடைந்த துன்பங்களையும் வைகுண்டசுவாமியும் வள்ளலாரும் தம் படைப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வட்டிக்குக் கடன் வாங்கும் ஏழை மக்கள் ஏமாற்றப்படும் சமூகக்கொடுமையை, 'வட்டி அநியாயம் வாங்கிடுவார்' என்பார் வைகுண்டர் (Vivekanandan, 1991).

வள்ளலார் ஒருவர் மற்றொருவருக்குக் கொடுக்கின்ற பணத்திற்கு வட்டி வாங்குவதிலும் தன் பணப்பெட்டியை நிரப்பிக் கொள்வதிலுமே கவனமாக உள்ளனர். இத்தகைய வாழ்க்கை மக்களுக்கு ஏற்றதல்ல என்பதை, 'பணப்பெட்டியைப் பணத்தாலும் வயிற்றுப்பெட்டியைச் சோற்றாலும் நிரப்பிக்கொண்டு இருப்போர் ஒட்டிய வயிற்றுடன் பட்டினிகிடப்போரைப் பார்க்கவும் அவர்கள் மனம் இடம்தரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி எட்டிமரம்போல் பெருகியிருக்கின்றீர்" என்ற உவமை வாயிலாகச் சாடியுள்ளார். மேலும், பெட்டியைப் பெருக்குதல் மூலம் ஏழைகளின் மனையைக் கவர்தல் கூடாது, வஞ்சனைகளை நெஞ்சில் நிரப்பிக் கொள்ளக் கூடாது, பெரியோர் மனம் வெறுக்க நடக்கக்கூடாது, என அறிவுறுத்தியதோடு மக்கள் வட்டித் தொழில் மூலம் பணப் பெருக்கத்திற்கு வழிதேடியதையும் ஆன்ம இலாபம் பெற ஆர்வம் காட்டவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். 'கொடுக்கும் பணத்திற்கு வட்டி வாங்குதல் கூடாது' என்று திரிகடுகம் கூறும் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

## களவு

சமூகக் கேடுகளில் ஒன்றான களவுத் தொழில் குறித்தும் செய்திகள் பதிவாகியுள்ளன. எளியோர்களின் சொத்தை எல்லாம் துட்டர்கள் கொள்ளையடித்துச் சேகரிப்பர் (Vivekanandan, 1991). என்றும், கள்ளத் தன்மையுள்ள மனிதருக்குச் சிலகாலமே வாழ்வு நீடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Vivekanandan, 1991). 'கள்ளர்பெருப்பர்' (Vivekanandan, 1991). 'திருட்டுப் பெருத்து வரும்' (Vivekanandan, 1991) என்று களவுத் தொழிலும் அதைச்செய்யும் திருடர்களும் பெருகுவர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வள்ளலார் கள்வர்கள் கொள்ளையடித்தனர் என்ற செய்தி தன் காதிலே விழுந்த போதெல்லாம் தன் உடம்பிலே நெருப்பு சுட்டாற்போல துயருற்றதை,

'இருப்பிலே பிறர்தம் இடத்திலே இருந்த இருப்பெல்லாம் கள்ளர்கள் கூடிக்

கரவிலே கவர்ந்தார் கொள்ளைஎன் றெனது காதிலே விழுந்தபோ தெல்லாம்

விரவிலே நெருப்பை மெய்யிலே மூட்டி வெதுப்பல் போல் வெதும்பினேன்' (Duraiswamy Pillai,1983) என்றும் பெற்றோர்கள் நடுக்கமுறும் அளவுக்குத் தீய செயல்களில் ஒன்றாகிய களவை,

"---------------------------------------------------------------------------உலகினில் பெற்றோர்

குலைநடுக் குறவே கடுகடுத் தோடிக் கொடியதீ நெறியிலே மக்கள்

புலைகொலை களவே புரிகின்றார் " (Duraiswamy Pillai,1983)

என மனம் வெதும்பியதையும் அவர் களவு செய்யும் எண்ணம் உடையவர்களைக் 'கள்ள மனத்துக் கடையோர்' எனவும் குறிப்பிட்டுள்ளார் (Duraiswamy Pillai,1983).

## கள்ளாமை

கள் அருந்துதல் பிற போதைப்பொருட்களைப் பயன்படுத்துதல் போன்றன சமூகக் குற்றங்களில் ஒன்றாக விளங்க காணலாம். 'கள்ளுண்டு வாழ்வது அறவழி நில்லாதார் தொழிலாகும்' என்கிறது

திரிகடுகம் வைகுண்டசுவாமி தன் படைப்புகளில் கள் இறக்கும் தொழில் செய்பவர்களைப் பற்றியும் கள் குடிப்பவர்களைப் பற்றியும் பிற போதைப் பொருட்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

கள் குடித்துத் திரியும் மேலாதிக்கத்தினர் ஒடுக்கப்பட்ட மக்களைத் தன் அருகில் கண்டுவிட்டால் சாணான் கள்ளேறி என்று விரட்டி அடித்தனர். இதனை, அகிலத்திரட்டு அம்மானை,

'கோவில் சிவாலயங்கள் கூடங்கள் சிங்காசனங்கள்

நாவுலகுங் கள்ளாய் நாடி யிருந்தாலும்

சாணான் கள்ளேறியெனச் சண்டாள நீசரெல்லாம்

வீணாகச் சாணாரை விரட்டி யடிப்பார்' (Vivekanandan, 1991)

என்று சுட்டியுள்ளது. கள் இறக்கும் தொழிலைச் செய்யக்கூடிய 'பறை' சாதியினரைப் பற்றியும் அகிலத் திரட்டு அம்மானை குறிப்பிடுகிறது (Vivekanandan, 1991).

'கஞ்சா அபின் பெருகும்' (விவேகானந்தன்,1991ப.434) என்று சுட்டிக்காட்டி நடைமுறையில் உள்ள பலவிதமான போதைப் பொருட்களில் கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருட்கள் நாட்டில் பெருகி காணப்படும் என்பதை 170 ஆண்டுகளுக்கு முன்பே வைகுண்டசுவாமி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வள்ளலார் சமூகத் தீமைகளுள் ஒன்றாக, கள் அருந்துதல் காணப்படுவதை,

"- - - - - - - --கொலை

களவுகட் காமம் முதலாக்

கண்டதீமைகள்" (Duraiswamy Pillai,1983)

என்பார். கள் அருந்துபவர்கள் பேசுவது உண்மைக்குப் புறம்பாகவே இருக்கும் என்பதை,

'கள்ளருந்துதல் சூதாடுதல் காமக் கடைதொறும் மயங்குதல் பொய்யே

விள்ளுதல் புரிவார்" (Duraiswamy Pillai,1983) என்கிறார்.

## பொய்யாமை

கலியுகத்தில் கலியாகிய மாயாசக்தியினால் மக்கள் அனைவருக்கும் மாயா நினைவுகளே விஞ்சி நிற்கின்றன. உண்மை பேசுவதே 'அறம் 'என்பதைச் சிறிதும் எண்ணாதவர்களாகச் செயல்படுகின்றனர். உண்மையே பேசவேண்டும் என்று நினைத்தாலும் பொய்யே பேசும் நிலை உருவாகிவிடும் என்பதை,

'கலியென்ற பேச்சு காதில் மிகக் கேட்டதுண்டால்

-- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

மெய்பேச வேணுமென்று மேவியிருந்தாலும்

பொய்பேச புத்திப் பொலியும் பொடுபொடென' (Vivekanandan, 1991)

என்றும்,

'பொய் பெருத்து பொய்ச்சத்தியமே பெருகும் (Vivekanandan, 1991)

என்றும், 'பொய்யரையும் பொய்சொல்வோரையும் வெட்டிப் பலியாக்கி கலியோடு அக்கினியில் கொண்டெரிப்பார் வைகுண்டர்' என்றும் கூறுவதிலிருந்து பொய்மையும் கலியும் அழியவேண்டுவன என்பதை உணர்த்தியுள்ளார் (Vivekanandan, 1991).

வள்ளலார் உலகமே பொய் என்றும் பொய் உலகில் வாழும் மக்கள் எல்லாம் பொய் பேசுவதையும் பொய்மையான செயல்களில் ஈடுபடுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். மக்களைப் பொய்ம்மையிலிருந்து விடுவிக்க (Duraiswamy Pillai,1983),

'ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை

நாடாதீர் பொய்உலகை நம்பாதீர் வாடாதீர்

சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர்' (Duraiswamy Pillai,1983)

என்று மக்களுக்கு அறிவுறுத்தி பொய்மையற்ற சன்மார்க்கத்தில் சார்ந்து பயன்பெற அழைப்பு விடுத்துள்ளமையை அறியலாம்.

## கலி

கலி என்ற சொல்லுக்கு கலிபுருடன், கலியுகம், துன்பம், வறுமை, வஞ்சகம், போர் முதலிய பொருள்கள் உள்ளன. மனிதனின் மனதில் எழக்கூடிய தூய்மையற்ற வஞ்சனையான செயல்பாடுகளைக் குறிப்பிடும் குறியீட்டுச் சொல்லாகக் கொள்ளலாம். கலி என்றால் மனதில் எழக் கூடிய மாய எண்ணங்கள் அவ் எண்ணங்களில் இருந்து உய்திபெற இறைவன் திருவருளாலே முடியும் என்பதை வைகுண்டசுவாமியும், வள்ளலாரும் வலியுறுத்தியுள்ளனர் (Gowsalya, 2021).

கலி என்று சொன்னால் அது சாதாரண எலி அல்ல கலியானது வலிமையான மாய நினைவாகிய மாய்மாலம் ஆகும். அதை அழிக்க ஆயுதங்களோ, அம்போ, தடியோ தேவையில்லை மனத்தூய்மையே கலி அழிக்கும் ஆயுதம் என்பதை வைகுண்டசுவாமி,

'கலியென்றால் எலியல்லவே கணையாளி வேண்டாமே

வலிமாய நினைவு மாய்மால மென்மகனே

ஆனதா லாயுதங்கள் அம்புதடி வேண்டாமே

மானமாக விருந்தால் மாளுங்கலி தன்னாலே' (Vivekanandan, 1991)

என்கிறார். மனத்தூய்மை பெறவேண்டுமென்றால் இறை நினைவோடு நல்லெண்ணம் நற்செயலோடு மனதை ஒருமுகப்படுத்த வேண்டும் மாய நினைவாகிய கலி அழிந்துவிடும் எனக் கூறுகிறார் (Roopa, 2021). வைகுண்டசுவாமியின் முதல் தவமாகிய 'யுகத்தவம்' கலியுக மக்களின் மனத்தைத் தூய்மையாக்கும் பொருட்டே மேற்கொண்டதாகும்.

திருவருட்பாவில் 'கலிமுறையீடு, 'கலி விண்ணப்பம்" என இரண்டு பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் வள்ளலார் உலகியல் துன்பங்களாகிய தீய செயல்கள், பொய்யுரை புகலல் இரக்கமில்லாமல் பழிபாவச் செயல்கள் புரிதல் இவற்றில் இருந்து விடுபட இறைவன் திருவருள் துணையின்றி வேறு உய்யும் வழியில்லை, மன எண்ணங்களே தீய செயல்பாடுகளின் உருவாக்கம் எனவே மனத்தைத் தூய்மை செய்ய இறைச்சிந்தையில் ஈடுபட வேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

இறைவன் திருவருளால் மனதில் எழும் வஞ்சக நினைவுகள் அழிந்துவிடும் என்பதை,

' - - -- - - - - - - நீ அருள் நயந்து நல்கினால்

கல்லையே அனையஎன் கன்ம நெஞ்சம்

ஒல்லையே வஞ்சம்விட் டுவக்கும் உண்மையே' (Duraiswamy Pillai,1983)

என்பார். கலியை அழிக்ககூடிய ஆயுதம் இறைவனின் திருவருளே என்பது வள்ளலார் கருத்து.

## முடிவுரை

வைகுண்டசுவாமி வள்ளலார் இருவரும் சமுதாயச் சீர்கேடுகளைத் தம் படைப்புகளில் சுட்டிக்காட்டியதோடு மக்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு நடைமுறைப் பிரச்சினைகளை மட்டும் கூறுவதுடன் நின்றுவிடாமல் அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துரைத்துள்ளனர். சாதியில்லா சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயன்றனர். தருமம் செய்வதையே வாழ்வின் உன்னத நிலையாகக்

கொண்டு செயல்பட அறிவுரை வழங்கியுள்ளனர். பசி தீர்த்தலே தலையாய அறம் என்பதைப் போதித்தனர். அனைவருக்கும் கல்வி கிடைக்க வழிவகை செய்ததுடன் அரசின் இன்றைய மதியஉணவு, உதவித்தொகை திட்டத்திற்கு முன்னோடியாக விளங்கியமையை உணரலாம். கணவனை இழந்த பெண்கள் மங்கல கோலத்துடன் விளங்க புரட்சி செய்துள்ளனர். வட்டிச்சுரண்டல், களவு செய்தல், பொய் பேசுதல், கள் குடித்தல் போன்ற சமூகத் தீமைகளைச் சுட்டிக்காட்டி தம் எதிர்ப்புக்குரலைப் பதிவு செய்துள்ளனர் இருவரது புரட்சிகளும் சமூக மாற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

## References


Duraiswamy Pillai, A.S., (1983) Thiruvarutpa Mulamum uraiyum, Annamalai University, Chennai, India.

Gowsalya, V., (2021) Principles of Theological touch in Vallarars work - An analysis, Indian Journal of Tamil, 2(3) 42-47. https://doi.org/10.34256/ijot2137

Kannaiya, Arasu., (2000) Amaithipuratchiyallar Ramalingavallal, Arasapillai Vadaivambal Karunaiillam, Neelapodi, India.

Loordhu, T., (1981) Naattarvazhakattiyal Ayvukal, Thokuthi Ontu, Parivel Pathipagam, Thirunelveli, India.

Ooranadigal, (1981) Thiruvarutpa urainadaipakuthi, Ramalingar Panimantam, Chennai, India.

Ponnu, E.R., (2002) Vaikundaswamykal Oor Avatharam, Ram pathipagam, Madurai, India.

Roopa, M., (2021), The Theological Priciples of Siddhar and Vallalar Songs, International Research Journal of Tamil, 3(S-2), 107-111. https://doi.org/10.34256/irjt21s221

Sarveswaran, P., (1982), Ottankadai, Pannaipadhipakam, Madurai, India.

Subramaniam, S V., (2012) Pathinen Keezhkanakku Noolkal Moolamum Thelivuraiyum, Manivaasagar pathippakam, Chennai, India.

Subramanian, S.V., (2010) sanga Ilakkiyam Ettuthokai moolamum thelivuraiyum, Manivasagar Pathippakam, Chennai, India.

Subramanian, S.V., (2011) Meiyappan Tamil Akarathy, Manivasagar Noolagam, Chennai, India.

Vellaivaranan, (1986), Thirvaruttpa Sinthanai, Chidambaram.

Venkataswami Naattaar, N.M, and Duraiswamy pillai, Avvai, SV., (1964) Manimekalai, Reprint, saiva sitthandha book Publishing House, Tirunelveli, India.

Vijayakumar, B., (2021) Theological principle and doctrine emphasized by Thiruvarutha, International Research Journal of Tamil, 3(S-2), 222-227. https://doi.org/10.34256/irjt21s242

Vivekanandan, N., (1991) Akilathirattu Amanai partI & II, first edition vivekananda pathipagam, Asaripallam.

Vivekanandan, N., (2004) Arulnool, Vivekananda Pathipagam, Nagercoil, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License